**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : S.T.C. 679/2022**

**Prosecution witness : ம.சா. 1** **Date : 11.11.2025.**

| | |
|---|---|
| **Name : முகேஷ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை–**

1) தொலைபேசி மூலமாக கேட்டதாக சொல்லப்படும் நிலையில் அதன் தொலைபேசி எண் சொல்லமுடியுமா என்றால் நினைவில்லை. பார்த்து சொல்ல முடியுமா என்றால் புதிய எண் என்பதால் சொல்ல முடியாது. எந்த தேதியில் கோயம்பத்தூரிலிருந்து ஒசூர் சென்று பணம் கொடுத்தேன் என்றால் நவம்பர் 2021ம் வருடம் கொடுத்தேன். 15ம் தேதியாகும். ஒசூரில் சென்று பணம் கொடுத்த போது எந்த தொலைபேசியில் தொடர்பு கொண்டேன் என்றால் என்னுடைய எண் நினைவில்லை.

2) போனில் பேசியதாக சொல்வதும், பணம் கொடுத்ததாக சொல்வதும் தவறு என்றால் சரியல்ல. ரூ.9,00,000/– பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் பேசிய தொலைபேசி எண் மற்றும் என்னுடைய தொலைபேசி எண் நினைவில்லை என்று சொல்வது ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய தொலைபேசி எண் தற்காலிக எண் என்பதால் தற்போது நினைவில்லை. என் பெயரில் அந்த சிம் இருந்ததா என்றால் ஆமாம். எந்த ஆதாரம் பெற்றேன் என்றால் ஆதார் அட்டை கொடுத்தேன். எந்த கம்பெனி என்றால் ஜியோ கம்பெனி சிம்கார்டு, எந்த வருடம் என்றால் இலவசமாக கொடுக்கப்பட்டதால் எனக்கு அதன் வருடம் நினைவில்லை.

3) கோயம்பத்தூரில் உள்ள வங்கியில் தான் நான் வரவு செலவு வைத்துள்ளேன்

என்றால் இல்லை. நான் வேலை செய்வது கோயம்பத்தூர் என்றும் என்னுடைய வங்கி கணக்கு கோயம்பத்தூரில் தான் துவங்கப்பட்டது என்றால் மேச்சேரியில் தான் நான் விண்ணப்பம் கொடுத்து துவங்கினேன். பணம் கொடுத்த தேதியன்று அதற்கு ஆதாரமாக ஏதாவது ஆவணம் பெற்றுக் கொண்டேனா என்றால் காசோலை தான் வாங்கினேன். வேறு ஆவணம் பெறவில்லை.

4) எதிரியின் வீடு எந்த தெருவில் எந்த கிராமத்தில் உள்ளது என்றால் கதவு எண்.29, J.P.Tranquil Layout, Titen township, Mathanagiri கால்நடை பண்ணை, ஒசூர் ஆகும். நான் அவருடைய வீட்டிற்கு சென்றுள்ளேன். பணத்தை எந்த கடையில் வைத்து கொடுத்தேன் என்றால் ஒசூர் பஸ் ஸ்டான்டு பக்கத்தில் உள்ள ஒரு பேக்கரியில் வைத்து கொடுத்தேன்.

5) எவ்வாறு நான் ஒசூரில் உள்ள பேக்கரியில் உள்ளேன் என எதிரிக்கு தெரியப்படுத்தினேன் என்றால் எதிரி ஒரு தற்காலிக எண்ணிலிருந்து என்னை அழைத்தார். நானும் தற்காலிக எண் மூலமாக அழைத்தேன்.பணம் கொடுத்த போது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் நாங்கள் இருவர் மட்டுமே இருந்தோம். எதிரியின் குடும்பத்தில் யார் யார் உள்ளார்கள் என்றால் நான் வீட்டிற்கு செல்லும் போது எதிரியும் அவரது குடும்ப நண்பர் வினோத் சேகர் இருவர் மட்டுமே இருந்தார்கள்.

6) வினோத் சேகர் வசம் நான் பணம் கொடுத்த விவரத்தை சொன்னேனா என்றால் அந்த நேரத்தில் அவர்களுக்குள் சிறு பிரச்சனை இருந்ததால் எதிரி சொல்ல வேண்டாமென சொல்லிவிட்டார். வினோத்சேகர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் ஒசூரைச் சேர்ந்தவர். அவர் எனக்கு கல்லூரி நண்பரின் பெரியப்பா மகன் ஆவார். நான் Ashok Ley land implant training நான் சென்ற போது வினோத் சேகர் என்பவர் எனக்கு பழக்கம் ஆனார். 4 நாட்கள் training சென்றேன்.

7) வினோத்சேகர் மற்றும் எதிரிக்கும் ஏற்கனவே நான் பணம் கொடுப்பதற்கு முன்பாக இருவரும் கருத்து வேறுபாடுடன் இருந்தார்கள் என்றால் ஆமாம். அதன் காரணமாக தான் எதிரி அவரிடம் பணம் பெற்றதை கூற வேண்டாமென

சொல்லிவிட்டார். வினோத்சேகர் வீட்டு முகவரி சொல்ல முடியுமா என்றால் அண்ணா நகர், 2வது வீதி, வார்டு 17, ஒசூராகும். 2015ம் வருடம் சென்றிருப்பேன். அதன் பிறகு தான் எதிரியை தெரியுமா அதற்கு முன்பே தெரியுமா என்றால் 2018ம் வருடத்திலிருந்து தான் எனக்கு எதிரியை தெரியும்.

8) திருப்பி செலுத்தும் வகையில் எதிரிக்கு என்ன தொழில் செய்து வந்தார் என தெரிந்து கொண்டேனா என்றால் ஆடை அலங்காரம் வேலை செய்ததாக தெரிந்து கொண்டேன். பணத்தை திரும்ப கேட்டு நான் தொடர்பு கொண்டேனா என்றால் இரு எண்களும் தொடர்பு எல்லைக்கு வெளியே இருந்தது.எந்த தேதியில் தொடர்பு கொண்டேன் என்றால் பல முறை நான் தொடர்பு கொண்டேன்.

9) ஆதார் அட்டை மூலமாக செல்போன் எண் பெற்ற நிலையில் அந்த ஆதார்அட்டை நகல் கொடுக்க முடியுமா என்றால் கொடுக்க முடியும். நான் மேச்சேரியில் குடியிருப்பதை காட்ட ஆதாரம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை. ஆனால் பாஸ்போர்டு மேச்சேரி முகவரியில் உள்ளது. நான் என் விசாரணையில் வினோத்க்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லாத நிலையில் நான் வழக்கிற்காக வேண்டி தொடர்பு உள்ளதாகவும் பிறகு அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டதாகவும் வழக்கிற்காக மாறி மாறி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10) வினோத் என்பவரிடமிருந்து காசோலை பெற்று அதனை என் பெயரில் பூர்த்தி செய்து இந்த பொய் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிரியின் கணவரும் வினோத் என்பவரும் நெருங்கிய நண்பர் என்றும் அதனால் எதிரியின் கணவருக்கும் எதிரிக்கும் கருத்து வேறுபாடு இருந்த நிலையில் காசோலையை எதிரியின் கணவர் வினோத் மூலமாக எனக்கு கொடுத்து அந்த காசோலையில் உள்ள கையொப்பத்தை நானே பூர்த்தி செய்து பொய் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. உண்மையில் தொலைபேசி மூலமாக பேசி பணம் கொடுத்திருந்தால் அவர் தொலைபேசி எண்ணை நான் சொல்லியிருப்பேன் என்றும் அவர்களை தொடர்பு கொண்டது

உண்மையாக இருந்திருந்தால் தொலைபேசி எண்ணை சொல்லியிருப்பேன் என்றும் நான் எதிரியுடன் பேசவில்லை அதனால் எந்தவிதமான வரவு செலவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை யார் என்று தெரியாது என சொல்லியுள்ள நிலையில் அதனை நிரூபிக்கும் விதமாக என்னிடம் ஆதாரம் உள்ளது.

<u>அனுமதியின் பேரில் மறுவிசாரணை</u>

11) என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் நான் மற்றும் வினோத், எதிரி ஆகியோர் பெங்களூரில் உள்ள நீலா பேலஸ்க்கு சென்றிருந்த போது என்னுடைய கைபேசியில் செல்பி எடுத்து அதனை நானே பதிவிறக்கம் செய்து சான்றிதழுடன் தாக்கல் செய்கிறேன். அதன் அசல் செல்போனிலிருந்து எடுக்கப்பட்டது குறித்த மெமரி கார்டு உள்ளது. அனைத்தும் சேர்த்து **ம.சா.ஆ.6** ஆகும்.( இந்த புகைப்படத்தில் உள்ள உருவம் கிராபிக் செய்யப்பட்டது என்றும் மற்றும் எதிரி அதிலுள்ள நபர் தான் இல்லை என்று அதனை காட்டி குறுக்கு விசாரணையின் போது கேட்கப்பட்ட நிலையில் இல்லை என தெரிவித்ததாலும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது).

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

12) என்னுடைய செல்போன் எண். 9626389477 ஏர்டெல் நிரந்தர தொலைபேசி எண்ணாகும். மேற்சொன்ன தொலைபேசி எண் மூலமாக எதிரியை தொடர்பு கொண்டுள்ளேனா என்றால் தொடர்பு கொண்டுள்ளேன். நான் தொடர்பு கொண்டேன் ஆனால் எதிரி வேறு சிம் வைத்திருந்தார். 2018, 2019 ம் வருடங்களில் நிரந்தர தொலைபேசி எண்ணிலிருந்து நான் எதிரியை தொடர்பு கொண்டேன். 2018, 2019 தொலைபேசி எண் விவர பட்டியலை எடுத்தால் எந்த இடத்திலிருந்த எங்கு பேசியது என்ற விவரம் தெரிய வரும் என்றால் தெரிய வரும். அவ்வாறு நான் ஒசூரில் உள்ள முகவரிக்கு தொடர்பு கொள்ளவில்லை என்பது கால் லாக் எடுத்தால் தெரிய வரும் என்றால் நிரூபிக்கலாம்.

13) நான் பணம் கேட்ட போது மேற்சொன்ன எண்ணிலிருந்து தான் எதிரி கேட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். மேற்சொன்ன

எண்ணிலிருந்து நான் தொடர்பு கொண்ட விவரத்தை என் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் உண்மையாக தொடர்பு கொண்டிருந்தால் அந்த விவரத்தை மனுவில் சொல்லியிருப்பேன் என்றால் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை. நான் எதிரியை தொடர்பு கொண்டு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

14) நான் கிராபிக் செய்து எதிரி உள்ளதாக சொல்லி புகைப்படத்தை தாக்கல் செய்வது ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் செல்போனிலிருந்து புகைப்படம் எடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.14 11:01:17 +0530

Judicial Magistrate No.II,
Mettur.